DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

STC–114/2025

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திரு.கோபாலகிருஷ்ணன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present.)

09.03.2026 – 01.05 PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் மீனங்குடி கிராமத்தில் குடியிருந்து ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மச்சான் ஆவார். பட்டியல் சாட்சிகள் 2, 3 யை எனக்கு தெரியும்.

2. தேதி நினைவில் இல்லை. சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நான் ஹோட்டலில் வேலை செய்து கொண்டிருந்த போது மதியம் 02.00 மணியளவில் சமையல் செய்து கொண்டிருந்த போது அறைத்து வைத்திருந்த தேங்காய் துருவலை தவறுதலாக வேறு ஒரு குழம்பில் போட்டு விட்டேன். அதற்காக எனது மச்சான் என்னை லேசாக திட்டி அறிவுரை வழங்கினார். நான் அப்போது கோபத்தில் இருந்ததால் போலிசாரிடம் முறையிட்டு தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும்.** புகார் மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. பதட்டத்தில் தடுமாறி கீழே விழுந்ததில் தலையில் எனக்கு லேசான காயம் ஏற்பட்டது. வேறு ஒன்றும் நடக்கவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>பிறழ் சாட்சி:–</u>

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –**

சம்பவம் நடந்த போது என்னை சேதுபதி ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார் என்றும், கையால் வலது கண்ணத்தில் அறைந்து கீழே தள்ளிவிட்டார் என்றும், நான் தடுமாறி விழுந்த போது பின்னந்தலையில் காயம் ஏற்பட்டது என்றும் அதற்கு கடலாடி அரசு மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும் போலிசாரிடம் கொடுத்த புகார் மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரி எனது மச்சான் என்பதால் அவரை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.09 18:50:29 +0530